[18th March 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றித் தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. எம். எஸ். மணி : போலீஸார் தவறு செய்தால் கோர்ட்டுக்குப் போகவேண்டும் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் போலீஸார் தவறு செய்கிறபொழுது போலீஸ் மேலதிகாரிகளுக்குப் புகார் செய்தால், அவர்கள் விசாரிக்க மாட்டார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் அவ்வாறு சொல்லவில்லை. போலீசார் தவறு செய்து, அரசாங்கம் அது தவறு இல்லை என்று நினைத்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்றால், அப்பொழுதுதான் தனிப்பட்டவர்கள் வழக்குத் தொடரலாம் என்று சொன்னேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : நாங்கள் யாரையும் கைது செய்ய மாட்டோம், மாப்பிள்ளை மாதிரி மாலை போட்டுக்கொண்டு வரலாம் என்று முழங்கிக்கொண்டிருந்த முதல் அமைச்சர் அவர்கள் இப்படி திடீரென்று 1,000 பேர்களைக் கைது செய்யவேண்டிய மாறுதல் நிலைமைக்கு வந்த காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாப்பிள்ளை என்ற வார்த்தை என்னிடமிருந்து வரவே இல்லை. கனம் அங்கத்தினர் வேண்டுமானால் நினைத்துக்கொள்ளலாம் தங்களைப்பற்றி. மாப்பிள்ளை என்று நான் சொல்லவில்லை. சொல்லமாட்டேன். என் வாயிலிருந்து அந்தச் சொல் வரவில்லை. அவ்வப்பொழுது நிலைமைக்குத் தக்கவாறு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். முதலில் கைது செய்யமல் இருக்கலாம். கொஞ்ச நாளைக்குப் பிறகு அரசாங்கத்திற்குத் தகவல் வரலாம். போலீஸாருக்கும் தகவல் வந்து அரசாங்கத்தினிடம் தெரிவிக்கலாம். அவ்வப்பொழுது கிடைக்கிற தகவலையொட்டி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது.

பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

* 266 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

(அ) ராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை, கீழ பசலை, மேல பசலை, வண்ணிக்குடி கிராமங்களிலுள்ள அரிஜனங்கள் பால் விநியோக கூட்டுறவுச் சங்கம் அமைத்துத் தரும்படி, 1962-ல் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்தார்களா ?

(இ) ஆம் எனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை யாது ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) மேற்படி நான்கு கிராமங்களில் உள்ள ஹரிஜனங்களிடமிருந்து 1962-ல் அரசாங்கத்திற்கு எந்த விதமான முறையீடும் வரவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(*a*) The Government did not receive any representation from the Harijans of the above four villages in 1962.

(*b*) Does not arise.

State Forensic Science Laboratory

267 *Q.*—Sri M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Home be pleased to state whether medico-legal and chemico-legal examinations are carried out on cases referred by the Mysore and Kerala States in the State Forensic Science Laboratory, Madras?